**செ.வெ.எண்: 17 / ஜூலை** **நாள் : 08.07.2017**

## இராமநாதபுரம் மாவட்டம்

## இளைஞர்களது வேலைவாய்ப்பு திறனை அதிகரித்திடும் விதமாக வேலைவாய்ப்பு திறன் விழிப்புணர்வு வாரம் நடத்துவது குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (08.07.2017) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இளைஞர்களின் வேலைவாய்ப்பு திறனை அதிகரித்திடும் விதமாக 10.07.2017 முதல் 15.07.2017 வரை வேலைவாய்ப்பு திறன் விழிப்புணர்வு வாரம் சிறப்பாக நடத்திட ஏதுவாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இன்றைய இளைஞர்களது வேலைபெறும் திறனை அதிகரிக்கும் விதமாக பல்வேறு திறன்பயிற்சிகள் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் கருதி இளைஞர்களிடையே வேலைவாய்ப்பு திறன்குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் உலக இளைஞர் திறன் தினமானது 15.07.2017 அன்று உலக இளைஞர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் பொறுப்பு மற்றும் அரசு செயலர் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அவர்களின் நேர்முக கடிதத்தில் 10.07.2017 முதல் 15.07.2017 முடிய ஒருவார காலம் திறன் வாரமாக அனுசரிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இளைஞர்களது வேலைவாய்ப்பு திறனை அதிகரிக்கும் விதமாக திறன் வாரமாக ஒவ்வொரு தினமும் ஒரு நிகழ்ச்சியாக நடத்தப்பபட்டு திறன் பயிற்சி மற்றும் அதனால் பெறப்படும் வேலைவாய்ப்பு குறித்து சிறப்பாக நடத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த திறன் வாரத்தில் நடத்தப்பட வேண்டிய நிகழ்ச்சிகள் குறித்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் மற்றும் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் மூலம் வழங்கப்படும் நிகழ்ச்சி நிரலின் படி அனைத்து துறை அலுவலர்களும் ஒத்துழைப்பு நல்கி நிகழ்ச்சியினை திறம்பட நடத்திட உறுதுணை புரிந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எஸ்.எஸ்.தனபதி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ரா.பேபி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.முனுசாமி, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை உதவி இயக்குநர் திரு.அபுபக்கர் சித்திக், உள்பட வட்டாட்சியர்கள், மாவட்ட கல்வி அலுவலர், அரசு தொழில் பயிற்சி நிலைய முதல்வர்கள், தொழிற்சாலை தலைமை ஆய்வாளர், அரசு கல்லூரி முதல்வர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**